



மதுரை மாவட்டம் திருமங்கலம் மேலக்கோட்டை அருகே வருகிற 7ஆம் தேதி கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் பல்லாயிரக்கணக்கானோர் கழகத்தில் இணையும் விழா வெகு சிறப்பாக நடைபெற உள்ளதையொட்டி அதற்கான கால்கோள் ஊன்றும் விழா மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் முன்னிலையில் நடைபெற்றது, உடன் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தேனி மாவட்ட செயலாளர்கள் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., கம்பம் ராமகிருஷ்ணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓ.பி.எஸ்.ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் உசிலம்பட்டி ஐயப்பன், ஆண்டிபட்டி மகாராசன், கழக நிர்வாகிகள் ஏர்போர்ட் பாண்டியன், முத்துராமன், முத்துராமலிங்கம், இளமகிழன், ஆர்.எஸ். டி.பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்றனர்





கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் பொதுநிதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய பேரூராட்சி அலுவலக கட்டிடத்தினை 3.3.2026 அன்று திறந்து வைத்து, சிறப்பித்தார். உடன் திருப்புவனம் பேரூராட்சி தலைவர் த.சேங்கைமாறன், மானாமதுரை நகர்மன்றத்தலைவர் சோ.மாரியப்பன் கென்னடி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திருமதி நா.விஜயலெட்சுமி, திருப்புவனம் பேரூராட்சி துணைத்தலைவர் அ.ரகமத்துல்லாகான், உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) ஜெயகிருஷ்ணன், திருப்புவனம் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி நா.கவிதா உட்பட பலர் உள்ளனர்.

### மார்ச் 5,6,7 தேதிகளில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

# தென் மாவட்டங்களான நெல்லை - தென்காசி - தூத்துக்குடி மாவட்டங்களில் சுற்றுப்பயணம்!

## பல்வேறு அரசு நலத்திட்டங்களை வழங்குகிறார்!

நெல்லை.மார்ச்.5-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று 05-03-2026 முதல் 07-03-2026 ம் தேதி வரை 3 நாட்கள் அரசு சுற்றுப்பயணமாக நெல்லை தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நடைபெறும் அரசு நிகழ்வில் பங்கேற்று பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கியும், முடிவற்ற திட்ட பணிகளை துவக்கி வைத்தும், நடைபெறும் அரசு நிகழ்வுகளில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரை யாற்றுகிறார்கள்.



நெல்லை,தென்காசி மாவட்ட கழகங்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்திற்கு இன்று (05-03-2026 வியாழக்கிழமை) மாலையில் நெல்லை மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்பதற்காக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெல்லை வருகையை முன்னிட்டு நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு. அப்துல்வகாப் எம்.எல்.ஏ.நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் தலைமையில் சிறப்பான உற்சாகமான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

நாளை (06-03-2026 வெள்ளிக்கிழமை) காலை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தென்காசி மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்று நலத் திட்ட உதவி வழங்கியும்,

புதிய மாவட்ட விளையாட்டு மைதானத்தையும் ஆய்வு பணி மேற்கொள்கிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கு வருகையை முன்னிட்டு

நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் சிறப்பான உற்சாகமான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதன் பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை 4 மணி அளவில் நெல்லை மாவட்டம் வள்ளியூரில் மாவட்ட தலைமை மருத்துவமனையை துவக்கி வைக்கிறார்.

அங்கு நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து குலசேகரத்தில் விளையாட்டு நிகழ்ச்சியிலும், குளச்சலில் நூலக திறப்பு விழாவிலும் பங்கேற்று சிறப்பிக்கிறார். இரவு 8 மணி அளவில் இறச்சகுளத்தில் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலையை திறந்து வைக்கிறார். பின்னர் இரவு 9-30 மணி அளவில் திருநெல்வேலி திரும்புகிறார்.

மறுநாள் 07-03-2026 சனிக்கிழமை அன்று காலை 10 -40 மணிக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடிக்கு சென்று அங்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெல்லை தென்காசி மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு நெல்லை,தென்காசி கழக மாவட்டங்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது

அனைத்து நிகழ்ச்சிகளிலும் மாவட்ட, மாநில,கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று மாவட்ட கழக பொறுப்பாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - மக்கள் நீதி மய்யம் பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று (4.3.2026) அண்ணா அறிவாலயத்தில் மக்கள்நீதி மய்யம் பொதுச் செயலாளர் பி.அருணாசலம் , துணைத் தலைவர் ஏ.ஜி.மௌரியா, துணைத் தலைவர் ஆர்.தங்கவேலு, மாநில செயலாளர் எஸ்.தட்சிணாமூர்த்தி ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

# தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - ஆம் ஆத்மி கட்சியுடன் பேச்சுவார்த்தை!





2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று (4.3.2026) அண்ணா அறிவாலயத்தில் ஆம் ஆத்மி கட்சி மாநிலத் தலைவர் வசீகரன், மாநில குழு உறுப்பினர், மாநில மகளிரணிசெயலாளர் திருமதி ஸ்டெல்லாமேரி, மாநில வர்த்தக அணி செயலாளர் ஜாகீர் உசேன், மாநில பிரச்சாரக் குழு உறுப்பினர்ஜெயக்குமார் (வழக்கறிஞர்) ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

### தொ.மு.ச. பேரவை வளாகத்தில்


# கழகத் தலைவர் - முதல்வர் பிறந்த நாள் விழா!

சென்னை,மார்ச்.5-

தமிழகத்தின் விடிவெள்ளி, புத்துலகத்தின் நவீன சிற்பி, தமிழகத்தின் கொள்கை போராளி தமிழக முதல்வர் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, தியாகராய நகரில் உள்ள தொ.மு.ச. பேரவை தலைமையகமான கலைஞரகத்தில் 02.03.2026 திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் சீரோடும், சிறப்போடும், எழுச்சியோடும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பேரவை தலைவர் கி. நடராசன் தொ.மு.ச. கொடியேற்றியும், பேரவை பொருளாளர் கோ.சி.வள்ளுவன் அவர்கள் கழக கொடியேற்றியும், பேரவை அலுவலக செயலாளர் ஆ.சீ. அருணகிரி இனிப்பு வழங்கி, முதல்வர் தளபதி வாழ்க வாழ்க என கோஷமிட்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து பிற்பகல் 12.00 மணியளவில் அறுசுவை உணவு 1000 பேருக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பேரவை துணைத்தலைவர் இரா.பொன்னுராம், இணைப் பொதுச்செயலாளர் ஜெ. விஜயகுமார், அமைப்பு செயலாளர் வே.வேலுசுவாமி, அலுவலக செயலாளர் ப.பன்னீர்செல்வம், செயலாளர்கள் எம்.சண்முகம், தனசேகரன், ஆர்.சண்முகசுந்தரம், சிவப்பிரகாசம், ஐ.சி.எப்.துரை, பத்மநாபன், அருணகிரிநாதன், கோமளா, சென்னை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் சுந்தரமூர்த்தி, துணைச் செயலாளர் பாட்சா பாபு, அசோக்குமார், செயற்குழு உறுப்பினர்கள் அமுல்ராஜ், சத்தியகுமார் மற்றும் அனைத்துத் துறைகளைச் சார்ந்த தொழிலாளர்கள் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.





தொ.மு.ச. சார்பில் அனைத்து மாவட்டங்களிலும், போக்குவரத்து பணிமனைகளிலும், தொழிற்சாலைகளிலும், முதல்வரின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கொடியேற்றி, இனிப்பும், அறுசுவையும் அளித்து, நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடினர்.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் அறிக்கை!

நாகர்கோவில்,மார்ச்,5-

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாளை (06.03.2026, - வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு நாகர்கோவில், வடசேரி அண்ணா சிலை அருகில் வைத்து எனது தலைமையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.



மேலும் அன்று மாலை 5.00 மணிக்கு குலசேகரம் பகுதியில் மினி விளையாட்டு அரங்கம் திறப்பு விழா நிகழ்ச்சி, மாலை 6.00 மணிக்கு குளச்சல் பகுதியில் கலைஞர் நூலகம் திறப்பு விழா நிகழ்ச்சி மற்றும் இரவு 7.00 மணிக்கு தமிழ்நாடு தலித் உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் சார்பில் புதிதாக அமைக்கப்பட்ட டாக்டர். அம்பேத்கரின் முழுஉருவ சிலை திறப்பு விழா நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு திறந்து வைக்கின்றார்.

ஆகவே, கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு மற்றும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ அறிக்கை!

நீலகிரி, மார்ச் 5 -

நீலகிரி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜூ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை(6-3-2026 - வெள்ளிக்கிழமை) காலை 11.30 மணி அளவில் மாவட்டக் கழக அவை தலைவர் கே.போஜன் தலைமையில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமை கொறடா கா. ராமசந்திரன் மற்றும் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் ஆர்.பி.பரமேஷ் குமார் (கூடலூர்) தென்றல் செல்வராஜ் (உதகை), கோவை திராவிடமணி (குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர- ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



பொருள்:

1. 9-3-2026 கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் திருச்சியில் நடைபெற உள்ள கழக மாநில மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து.

2.2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து.

3.கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.